இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

மே 14, புதன்கிழமை காலை வத்திக்கான் னய ஆறாம் பவுல் அரங்கத்தில் கீழை வழிபாட்டுமுறை திருஅவையினரைச் சந்தித்து உரையாற்றினார் திருத்தந்தை 14ஆம் லியோ.

# கீழை வழிபாட்டுமுறைத் திருஅவையினருக்கான யூபிலி



கீழை வழிபாட்டுமுறை திருஅவையினருக்கான யூபிலியானது வத்திக்கானில் மே 12 திங்கள்கிழமை சிறப்பிக்க ஆரம்பிக்கப்பட்டு மே 14 புதன்கிழமையுடன் நிறைவிற்கு வந்தது.

மே 12, திங்கள்கிழமை காலை வத்திக்கான் னய பேதுரு பெருங்கோவிலில் இருக்கக்கூடிய பாடகர் சிற்றாலயத்தில் (Choir Chapel) எத்தியோப்பிய ஆயர் பேரவையின் தலைவர், கர்தினால் Berhaneyesus Demerew Souraphiel அவர்களால் எத்தியோப்பிய வழிபாட்டு முறை சிறப்பு காலைப்புகழ் வழிபாடு நடைபெற்றது.

மே 12, திங்கள்கிழமை மாலையில் உரோம் மேரி மேஜர் பெருங்கோவிலில் உள்ள பவுலின் சிற்றாலயத்தில் அர்மேனிய வழிபாட்டு முறை சிறப்புத் திருப்பலியானது நடைபெற்றது.

மே 13, செவ்வாய்க்கிழமை வத்திக்கான் னய பேதுரு பெருங்கோவிலில் கல்தேய முறைப்படி நடந்த செப வழிபாட்டிற்கு கல்தேய வழிபாட்டுமுறை கத்தோலிக்க சபையின் முதுபெரும் தந்தை கர்தினால் லூயிஸ் ரபேல் சாக்கோ (Louis Raphaël Sako) அவர்கள் தலைமையேற்றார்.

அதன் தொடர்ச்சியாக மே 14, புதன்கிழமை காலை வத்திக்கான் னய ஆறாம் பவுல் அரங்கத்தில் கீழை வழிபாட்டுமுறைத் திருஅவையினரைச் சந்தித்து உரையாற்றினார் திருத்தந்தை 14ஆம் லியோ.

## திருத்தந்தையின் உரைக் கருத்துக்கள்

“இயேசு உயிர்த்தெழுந்தார். அவர் உண்மையிலேயே உயிர்த்தெழுந்தார்!” பல நாடுகளில் உள்ள கீழை வழிபாட்டு கிறிஸ்தவர்கள் உயிர்ப்பின் காலத்தில் மீண்டும் மீண்டும் சொல்ல சோர்வடையாத இந்த வார்த்தைகளுடன் நான் உங்களை வாழ்த்துகிறேன், ஏனென்றால் அவை நமது நம்பிக்கை மற்றும் எதிர்நோக்கின் மையமாக இருக்கின்றன. உயிர்த்த இயேசு கிறிஸ்துவில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட உங்களை இந்த எதிர்நோக்கின் யூபிலி ஆண்டில் பார்ப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. உங்கள் அனைவரையும் உரோமிற்கு அன்புடன் வரவேற்கின்றேன். எனது தலைமைத்துவப் பணியின் முதல் கூட்டங்களில் ஒன்றினை கீழை வழிபாட்டுமுறை திருஅவையினரான உங்களுக்காக அர்ப்பணிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருஅவைக்கு நீங்கள் தேவை. கீழை வழிபாட்டு திருஅவையினர் திருஅவைக்கு வழங்கக்கூடிய பங்களிப்பு மகத்தானது! மனிதனை முழுமையாக உள்ளடக்கிய வழிபாட்டு முறைகள், மீட்பின் அழகைப் பாடுகின்ற மற்றும் கடவுளின் மாட்சிமை நமது மனித பலவீனத்தை எவ்வாறு தழுவுகிறது என்பதைப் பற்றிய வியப்பு உணர்வைத் னண்டுகின்ற வழிபாட்டு முறைகள் நமக்குத் தேவை. வழிபாட்டு முறைகளில் உயிருடன் இருக்கும் மறைபொருள் உணர்வை மீட்டெடுக்க வேண்டிய அவசியம் நமக்கு உள்ளது. குறிப்பாக கிறிஸ்தவ மேற்கத்திய நாடுகளில் கடவுளின் முதன்மையான உணர்வு, மறைபொருளியலின் முக்கியத்துவம், கிழக்கத்திய ஆன்மிகத்தின் பொதுவான மதிப்புகள், நிலையான பரிந்துரை, தவம், நோன்பு இருத்தல், ஒருவரின் தனிப்பட்ட மற்றும் முழு மனிதகுலத்தின் பாவங்களுக்காக மனம் வருந்துதல் ஆகியவற்றை மீண்டும் கண்டறிந்து வாழ்வது மிக முக்கியமானது!

கீழைவழிபாட்டு தலத்திருஅவை ஆன்மிக மரபுகள், பழமையானவை, ஆனால் எப்போதும் புதியவை, குணமளிக்கும் ஆற்றல் கொண்டவை. கீழை வழிபாட்டுமுறை தந்தையான புனித ஐசக் கூறுவது போல,

நான் உங்களது பணிக்காக உங்களுக்கு நன்றி கூறுகிறேன், மேலும் உங்களுக்கு என் ஆசீரை மனதார வழங்குவதன் வாயிலாக திருஅவைக்காக, எனது பணிக்காக செபிக்கும்படி உங்களது ஆற்றலுள்ள செபத்தினை வேண்டுகின்றேன். அனைவருக்கும் நன்றி.

இவ்வாறு திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள் தனது உரையினை நிறைவு செய்ததும் கூடியிருந்த மக்கள் அனைவருக்கும் தனது ஆசீரினை வழங்கினார்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# குழந்தைகள் அனைத்து அடிமைத்தனங்களில் இருந்தும் விடுவிக்கப்பட....




**பாலர் பருவத்தினர் போர்க்களத்தில் வன்முறைகளுக்கும் சுரண்டல்களுக்கும் உட்படுத்தப்படுவது மட்டுமல்ல, கட்டாயத் திருமணங்கள், பாலியல் அத்துமீறல்கள் உட்பட பல்வேறு உரிமை மீறல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.**

இன்றைய நிலையில் உலகில் பத்துக்கு ஒரு சிறார் சுரண்டல் நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதால், இது குறித்து நாம் விவாதிக்க வேண்டிய அவசரத்தேவை உள்ளது என ஐ.நா.வில் உரையாற்றினார் திருப்பீடப் பிரதிநிதி, பேராயர் கபிரியேலே காச்சா.

சிறார் தொழில் முறை என்பது தன் அனைத்து நிலைகளிலும் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும் என்ற தலைப்பில் ஐ.நா. வில் இடம்பெற்றுவரும் கூட்டத்தில் உரையாற்றிய ஐ.நா.விற்கான திருப்பீடப் பிரதிநிதி, பாலகர்கள் எம்முறையில் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும் என பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் திருத்தந்தை 13ஆம் லியோ அவர்கள் கூறியதையும் மேற்கோள் காட்டினார்.

மனித குடும்பத்திற்கு கடவுளால் வழங்கப்பட்ட மிகச் சிறந்த கொடையான ஒவ்வொரு குழந்தையும் அதன் மாண்பு மதிக்கப்படும், அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படும், ஒன்றிணைந்த வளர்ச்சி ஊக்குவிக்கப்படும் வழலில் வளர்க்கப்பட வேண்டும்.

குழந்தைகளின் மாண்பையும் அடிப்படை உரிமைகளையும் அப்பட்டமாக மீறும் வகையில், பாலர் பருவத்தினர் போர்க்களத்தில் வன்முறைகளுக்கும் சுரண்டல்களுக்கும் உட்படுத்தப்படுவது மட்டுமல்ல, கட்டாயத் திருமணங்கள், பாலியல் அத்துமீறல்கள் உட்பட பல்வேறு உரிமை மீறல்களுக்கு அவர்கள் உட்படுத்தப்படுவதாக மேலும் தெரிவித்தார்.

இத்தகைய உரிமை மீறல்களுக்கு உட்படுத்தப்படும் குழந்தைகள் அனைவரும் விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு கருணையும், அக்கறையும், நம்பிக்கையும் ஊட்டப்பட வேண்டும். மாற்றுத்திறனாளி குழந்தைகள் குறித்தும் திருப்பீடத்தின் அக்கறையை வெளியிட்ட பேராயர், அவர்கள் சமூகத்தின் அங்கமாக இணைக்கப்பட்டு அவர்களுக்கான பாதுகாப்புகள் வழங்கப்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

பாலர் தொழிலாளர் முறை என்ற அநீதியை அகற்றி அனைத்து குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்காக அனைத்து நாடுகளும் உழைக்க வேண்டும் எனவும், குழந்தைகளின் நல ஆதரவுத் திட்டங்கள், கல்வி, அவர்களுக்கான வாய்ப்புகள் போன்றவை மூலம் அவர்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கென உழைக்க வேண்டும் எனவும் திருப்பீடம் விண்ணப்பிப்பதாக தன் உரையின் இறுதியில் மீண்டும் வலியுறுத்தினார் பேராயர் காச்சா.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்

# உலக தகவல் தொடர்புத் துறையினருடன் திருத்தந்தை 14-ஆம் லியோ



மே 12, திங்கள்கிழமை காலை வத்திக்கான் னய ஆறாம் பவுல் அரங்கத்தில் உலக சமூகத்தொடர்புத் துறையினரைச் சந்தித்தார் திருத்தந்தை 14-ஆம் லியோ.

தகவல் தொடர்பு என்பது தகவல்களைப் பரப்புவது மட்டுமல்லாது, உரையாடல் மற்றும் கலாச்சாரத்தை உருவாக்கும் இடங்களாகவும், மனித மற்றும் மின்னனு வழல்களின் கலாச்சாரமாக மாறுவதாகவும் இருக்கவேண்டும் என்றும், அளப்பரிய ஆற்றல் கொண்ட செயற்கை நுண்ணறிவுக் கருவிகளை மனித குல நன்மை மற்றும் பொறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார் திருத்தந்தை 14-ஆம் லியோ.

மே 12, திங்கள்கிழமை காலை வத்திக்கான் னய ஆறாம் பவுல் அரங்கத்தில் உலக சமூகத்தொடர்புத் துறையினரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள், முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவு முதல் கர்தினால்கள் அவை, திருத்தந்தை தேர்தலுக்கான கான்கிளேவ் அவை என திருஅவையின் மிக முக்கியமான அருளின் காலகட்டத்தில் தங்களது பணியினைச் சிறப்பாக செய்த அவர்களுக்குத் தனது நன்றியினை எடுத்துரைத்தார்.

அமைதியை ஏற்படுத்துபவர்கள் பேறுபெற்றோர் என்று இயேசு மலைப்பொழிவில் எடுத்துரைத்த வார்த்தைகள் நம் ஒவ்வொருவரையும் ஒரு வித்தியாசமான தகவல்தொடர்பைக் கொண்டுவருவதற்கான உறுதிப்பாட்டிற்கு அழைக்கிறது என்றும் அமைதியின் வழியில் வாழ நம் அனைவருக்கும் சவால் விடுக்கின்றது என்றும் கூறினார் திருத்தந்தை.

அமைதி நம் ஒவ்வொருவரிடமிருந்தும் தொடங்குகிறது, நாம் மற்றவர்களைப் பார்க்கும் விதம், மற்றவர்களது குரலுக்கு செவிசாய்த்தல் என நாம் தொடர்பு கொள்ளும் விதம் மிக முக்கியமானது என்றும், நமது வார்த்தைகள் மற்றும் உருவங்களால் போர் வேண்டாம் என்றும், போரை நிராகரிப்பவர்கள் நாம் என்பதை எடுத்துரைப்பவர்களாகவும் நாம் இருக்க வேண்டும் வலியுறுத்தினார் திருத்தந்தை.

மெரினா ராஜ் - வத்திக்கான்



# இரக்கத்துடன் பணியாற்ற அழைக்கப்பட்ட திருத்தொண்டர்கள் (டீக்கன்)



பிளெண்தோங்: ஏப்ரல் 30 முதல் மே 2 வரை, பினாங்கு, மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டங்களைச் சேர்ந்த 17 நிரந்தரத் திருத்தொண்டர்கள், அவர்களுடைய துணைவியர்கள், 6 பங்கேற்பாளர்கள் ஆகியோர் மாஜோடி மையத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் கூட்டத்திற்காக ஒன்றுகூடினர். மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் "இரக்கத்தின் அடையாளங்கள்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, இறைவார்த்தை, பலிபீடம், தானம் என மூவகை பணியை அடிப்படையாகக் கொண்டு இக்கூட்டம் நடத்தப்பட்டது.

ஆயர் பெர்னார்ட் பால், பேராயர் ஜூலியன் லியாவ், அருட்பணியாளர்கள் எட்ரியன் பிரான்சிஸ், எட்வின் பீட்டர், அருட்சகோதரி சாந்தி எம். (FdCC) ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். முக்கிய பங்கேற்பாளரான கார்டினல் செபாஸ்டியன் பிரான்சிஸ், வத்திகானில் நடைபெறும் கான்க்ளேவ் புதிய திருத்தந்தை தேர்தெடுப்பு பேரவைக்குச் செல்ல வேண்டியிருந்ததால் இக்கூட்டத்தில் பங்கேற்க இயலாமல் போனது குறிப்பிடத்தக்கது.

பேராயர் ஜூலியன், திருத்தொண்டர்களின் தூதுரைப் பணிகள் அவரவர் வீட்டிலிருந்தே தொடங்குகின்றன என்பதை நினைவுறுத்தினார். திருமணமும் திருப்பணியும் ஒட்டுமொத்தமாக இசைவாக இருத்தல் அவசியம் என்றார் அவர். தங்கள் குடும்ப வாழ்க்கையிலும், தொழிலிலும், திருப்பணியிலும் சமநிலையைப் பராமரிக்க வேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

பொது வாழ்க்கை என்பது முக்கியமான தூதுரை பணியாகக் கருதப்படுகிறது. பல திருத்தொண்டர்கள் உலகைச் சார்ந்த பணிகளில் ஈடுபட்டிருந்தாலும், நீதி, இரக்கம், நேர்மை ஆகியவைகளின் மூலம் கிறிஸ்துவின் இரக்கமாக எதிரொலிக்க அழைக்கப்படுகிறார்கள்.

அருட்பணியாளர் எட்வின், "நீங்கள் நினைவுகூரப்பட விரும்புவது எப்படி?" என்ற வினாவை எழுப்பினார். வாழ்க்கையை உண்மையோடும், பணிவோடும், இரக்கத்தோடும் வாழ வேண்டும் என்றும், உணர்வுகளைக் கையாளும் திறன் (Emotional Intelligence), வழிநடத்தும் உணர்வுத்திறன் (Pastoral Sensitivity) இவை இரண்டையுமே வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த சந்திப்பு திருத்தொண்டர்களின் துணைவியர்களின் முக்கிய பங்கையும் கௌரவித்தது. அருட்சகோதரி சாந்தி, ஜப்பானிய கலையான கி'ன்சுகி'யைப் பயன்படுத்தி, உடைந்ததைக் கட்டியெழுப்புவதன் மூலம் குணமாகுதல் எப்படி நிகழும் என்பதை விளக்கிக் கூறினார். திருத்தொண்டர்களின் துணைவியர்கள் தங்கள் கணவர்களை ஆதரிப்பதன் மூலம் தங்கள் சுய ஆன்மீக பயணத்தை வளர்த்துக்கொள்ளும் வழிகளை ஆராய இந்த பகுதி உதவியாக அமைந்தது.

ஆயர் பெர்னார்ட், ஏழைகளுக்கும் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கும் பணிவோடு சேவை செய்யும் திருத்தொண்டர்களாக, கடவுளின் இறை இரக்கத்தின் அடையாளமாக இருக்க வேண்டும் என்று தனது முடிவுரை செய்தியில் குறிப்பிட்டார். இறுதியில், ஜெபம், தியானம், இறை இரக்கத்தில் அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை நடத்தவும், வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொள்கின்ற மனப்பான்மையை உடைய திருத்தொண்டர்களாக இருக்கவும் அழைப்பு விடுக்கப்பட்டது.

ஐசெக் ஆல்பிரட் சிம்பன்

# புகுமுக கிறிஸ்துவப் பயிற்சி தூதுரை பணி ஆவியை புதுப்பித்தல் பாடநாள்



கோலாலம்பூர்: மே முதல் நாளன்று கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தைச் சேர்ந்த புககுமுக கிறிஸ்துவப் பயிற்சியைச் (RCIA) சேர்ந்த ஒருங்கிணைப்பாளர்கள், உதவியாளர்கள், ஆசிரியர்கள் என சுமார் 160 பேர், ஆண்டுதோறும் நடைபெறும் புகுமுக கிறிஸ்துவப் பயிற்சியின் தூதுரைப் பணி ஆவியைப் புதுப்பித்தல் பாட நாளுக்காக கோலாலம்பூர் திரு இருதய ஆண்டவர் தேவாலயத்தில் ஒன்று கூடினர். கோலாலம்பூர் மறைக்கல்வி ஆலோசனைக் குழுவினால் (KLACM) ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியின் நோக்கம் "தலையாயத் தூதுரைப் பணியை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துதல்" என்பதாகும். மேலும் புகுமுக கிறிஸ்துவப் பயிற்சிப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் தூதுரைப்பணியின் ஆவியைப் புதுப்பிப்பதற்காகவும் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தத் தூதுரைப்பணியை இன்னும் அதிகமாக தெரிந்து கொள்ள மேற்றாசனத்தின் கிறிஸ்துவுக்கான புதிய மறைப்பரப்பு திட்டக் (AMNEC) குழுவையும் அழைத்திருந்தனர். இக்குழு மூன்று முக்கிய தலைப்புகளில் இப்பயிற்சியை வழிநடத்தினர். இவர்களின் உரை ஆங்கிலம், சீனம், தமிழ், மலாய் மொழிகளில் அமைந்திருந்தன. இதனால் பல்வேறு மொழி பேசும் பங்கேற்பாளர்கள் முழுமையாக இதில் பங்கேற்க அரும் வாய்ப்பாக அமைந்தது.

முதல் அமர்வு "கெரிக்மா: அதாவது நற்செய்தியைத் திறம்பட அறிவித்தல்" எனும் தலைப்பில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் பங்கேற்பாளர்கள் அனைவரும் நற்செய்தியின் உன்னத அறிவித்தலுக்குத் திரும்ப அழைக்கப்பட்டனர். இது வெறும் தகவலாக மட்டும் அல்லாமல் தனிப்பட்டத் தொடர்பாக அமைந்தது. அதே சமயம் இந்த ஒன்றுகூடுதலின் போது நற்செய்தி அறிவித்தலுக்கான 'Quad' கருவியும் அறிமுகம் செய்யப்பட்டது. இக்கருவி, நற்செய்தி பகிர்தலின் போது நாம் கொடுக்கும் செய்திகள் யாவும் தெளிவாகவும், நம்பகத்தன்மையுள்ளதாகவும் அமைய துணைபுரிகிறது.

இரண்டாவது தலைப்பு "நற்செய்தி அறிவித்தலுக்கு வழியனுப்புதல்" என்பதாகும். இறைவனைப் பற்றி இன்னும் அதிகமாக அறிய விரும்புவர்களுடன் பயணிப்பது என்பது ஆவிக்குரிய பயணம் என்பதே முற்றிலும் உண்மை. ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் பரிசுத்த ஆவியின் செயலை உணர்ந்து, நம்பிக்கையுடனும் இரக்கத்துடனும் இருப்பது அவசியம் என வலியுறுத்தப்பட்டது. RCIA குழுவினர் கற்பிப்பதைத் தவிர, பிறரின் விசுவாச வளர்ச்சிக்குத் துணையாளர்களாக மாற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர்.

இறுதியாக, "நற்செய்தி அறிவிக்கும் கலாச்சாரத்தை உருவாக்குதல்" எனும் தலைப்பில் கருத்துகள் முன்னெடுக்கப்பட்டன. பங்கேற்பாளர்கள் பங்கில் எப்படி மறைபரப்புச் சமூகமாக உருவெடுக்க முடியும் என்பதைக் குறித்து கருத்து பரிமாற்றம் நடைபெற்றது. தூதுரைப்பணியை எப்படி மேற்கொள்வது தொடர்பாக பல உக்திகள் இங்கு பகிரப்பட்டன. இறுதியாக முனைவர் ஸ்டீவன் செல்வராஜூ அவர்கள் AMNEC குழுவிற்கும், திரு அவைக்கும் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய அனைத்து வகையிலும் உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். பங்கேற்பாளர்கள் அனைவரும் தூய ஆவியினால் புதுப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவின் நற்செய்தியை தங்கள் சமூகங்களுக்குக் கொண்டுச் செல்லத் தயாராயினர்.

# பாஸ்கா 6ஆம் ஞாயிறு (25.5.2025)

**திரு.ப 15: 1-2, 22-19, தி.வெளி 21:10-14, 22-23, யோ 14: 23-29**

## தாழ்ச்சியும் மன அமைதியும் நம்மில் குடிகொள்வதாக

இன்று திருஅவை இயேசு உயிர்த்தெழுந்த 6ஆம் ஞாயிறைக் கொண்டாடுகிறது. முதல் வாசகத்தில் இயேசு கிறிஸ்துவின் மீது வைத்திருந்த நம்பிக்கையின் வழி அனைவரும் ஒரே மக்களாகின்றனர். யூதர்கள் சிலர் இந்த போதனையை ஏற்க மறுக்கின்றனர். இந்த வாதத்திற்கு முடிவு கட்டவே திருச்சங்கம் ஜெருசலேமில் கூடுகின்றது.

இந்த கூட்டத்திற்கு பவுலும் பர்னபாவும் இன்னும் சிலரையும் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றனர். இங்கே ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். அதாவது, ஒருமனத்துடன் கூடி வந்து, தேர்ந்தெடுத்து அன்புக்குறியவர்களை அனுப்புகிறோம் என்று சொல்கின்றனர்.

பவுல் இயேசுவின் சீடர்களுக்கு எதிராக புறப்பட்ட போர் வீரர். மனம் மாறி இயேசுவை ஏற்றுக்கொண்டு மூப்பர்களின் அன்பு சீடராக, நம்பிக்கையின் பணியாளாராக, தாழ்ச்சியின் சின்னமாக சீடத்துவத்தை ஆழப்படுத்தி நமக்கு முன்மாதிரிகையாக விளங்குகிறார். ஆக, நம்பிக்கை பெற்றவர்களாக திகழ நாம் அழைக்கப்படுகிறோம்.

நமது அன்றாட வாழ்வில் கணவனோ, மனைவியோ, பிள்ளைகளோ, ஆசிரியர்களோ, அல்லது இறை பணியாளர்களோ ஏதும் சொன்னால் நிச்சயம் மற்றவர்கள் செவிமடுத்து கேட்பர். இது சாதாரண வாழ்வில் கடைபிடிக்கப்படும் நிகழ்வு.

அவ்வாறு ஒருவர் சொல்லும் பொழுது அவருக்கு மதிப்பு கொடுத்து செயல்படுத்த முனைவோம். காரணம் அவர் மீது உள்ள மரியாதை, மதிப்பு, அக்கறை ஆகியவை அடங்கும் எனலாம்.

அதுபோலத்தான் இன்றைய நற்செய்தியில் இயேசுவின் மீது அன்பு கொண்டிருந்தால் நிச்சயம் அவர் சொல்வதை கேட்போம். கடைபிடிப்போம், செயல்படுவோம் பயன் பெறுவோம் எனக் கூறுகிறார்.

சில வாழ்வுதரும் வார்த்தைகளில், வாக்குறுதியையும் காண்போம்:

1. தூய ஆவியாரம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார்.
2. அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்.
3. என் அமைதியை உங்களுக்கு தருகிறேன்.
4. இந்த அமைதி உலகம் தரும் அமைதி அல்ல.
5. உள்ளம் கலங்க வேண்டாம், மருள வேண்டாம்.
6. நான் போகிறேன் பின் உங்களிடம் திரும்பி வருவேன்.
7. மகிழ்ச்சி அடைவீர்கள்.

என சீடர்களுக்கும் நமக்கும் ஊக்கம் அளிக்கும் உற்சாகமான வார்த்தையை உறுதி மொழியாக கூறுகிறார். இவ்வாறு இரக்கபட்டுக் கூறிய சொற்களில் நாம் எவ்வாறு உறுதியாக நம்பிக்கையோடு வாழ்கிறோம்.

அமைதியை உங்களுக்கு அளிக்கிறேன் எனச் சொல்லும் போது உலக அமைதியையா குறிப்பிடுகிறார். அப்படியாயின் இன்று நடக்கும் நாட்டுக்கு நாடு போர்தொடுத்து பல அழிவுகளை கொடுக்கின்றனவே இதை என்னவென்று சொல்வது. யார் பலசாலி என மூர்க்கமாக அல்லவா தன்னுடைய ஆயுத பலத்தை காண்பிக்கின்றன.

மாறாக அமைதி என்பது பூரண, முழுமை என்ற அடிப்படை பொருளிலே மனிதன் இறைவனோடும், மனிதன் மனிதனோடும், மனிதன் தமக்குள்ளே இருக்க வேண்டிய தலையாய அமைதியையும் வலியுறுத்துகிறார்.

இயேசு விரும்பி அளிக்கும் இந்த அமைதி ஏற்றுக்கொண்டும், பெற்றுக் கொண்டும், தகுதியுடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதே அவரின் எதிர்பார்ப்பு.

எனவே, இயேசுவின் பெயரால் பெற்றுக் கொள்ளும் தூய ஆவியின் வரங்கள் நம்மில் செயல்பட முதல் வாசகத்தில் தாழ்ச்சியும் நற்செய்தியில் உள்ளம் அமைதியையும் பெற்றுக்கொண்டு நம்மை பக்குவப்படுத்தி சீடத்துவத்தை ஆழப்படுத்துவோமாக. சாட்சியம் பகறுவோம்.

ஆ.வி.டேவிட்.